DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **CC 62/2016** |
| **Deposition of witness for** | : | **Accused** |
| **Serial No. of Witness** | : | **DW.4** |
| **Name** | : | வளர்மதி பால்வண்ணன் |
| **Father's Name** | : | க/பெ பால்வண்ணன் |
| **Village** | : | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஏர்வாடி கிளை |
| **Taluk** | : | நான்குநேரி தாலுகா |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 25.09.2018.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் எங்கு பணியாற்றுகிறேன் என்றால், ஏர்வாடி கிளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 2015ல் இருந்து கிளை மேலாளராக பணியாற்றுகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரியுள்ளபடி புகார் மனுதாரர் ரமேஷின் வங்கி கணக்கு பட்டியலை கொண்டு வந்துள்ளேன் என்றால், கொண்டு வந்து இருக்கிறேன். ஜனவரி 2014 முதல் செப்டம்பர் 2014 வரைக்கான கணக்கு பட்டியல் கோரப்பட்டுள்ளது அதை நான் தாக்கல் செய்கிறேன் அது எ.ம.த சா.ஆ. 12. இந்த எ.ம.த. சாஆ.12 ஆவணப்படி புகார்தாரர் ரமேஷ் மேற்படி கால கட்டத்தில் ரூ.1 லட்சம் கணக்கில் வைத்திருந்தாரா என்றால், இல்லை. எ ம சா ஆ 12 ஆவணப்படி 16.09.2015ல் புகார்தாரர் கணக்கில் ரூ.21934/- வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்ன தொகை என்றால், புகார்தாரர் எங்கள் வங்கியில் நகை கடன் பெற்றிருந்தார் அதற்காக நாங்கள் வைப்பீடு செய்த தொகைதான் ரூ.21934/- ஆகும். அதே தினத்தில் புகார்தாரர் ரூ.22 ஆயிரத்தை கணக்கில் இருந்து எடுத்துள்ளார் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். புகார்தாரர் ரமேஷ் எப்போது எங்கள் வங்கியில் கணக்கு தொடங்கினார் என்றால், 22.12.2009ல் தொடங்கினார். இந்த வங்கி கணக்கு தற்போதுவரை செயல்பாட்டில் உள்ளதா

என்றால், ஆமாம் செயல்பாட்டில்தான் இருக்கிறது. பொதுவாக வங்கி கணக்கில் ரூ.100/- செலுத்தி அதை எடுத்தாலும் அதுவும் வங்கி கணக்கில் வரவு செலவு கணக்கு வைத்துள்ளதாகதான் அர்த்தம் என்றால் சரிதான். 22.12.2009 கணக்கு தொடங்கிய காலத்தில் இருந்து தற்போது வரைக்கான வங்கு கணக்கு பட்டியலை கொண்டு வந்துள்ளேனா என்றால், அழைப்பாணையில் அவ்வாறு கேட்கப்படாததால் கொண்டுவரவில்லை. எமசா ஆ 12 ஆவணத்தில் கண்ட 10.01.2014 க்கு பின்னிட்ட காலத்திற்குரிய புகார்தாரரின் வரவு செலவு கணக்குதான் எனக்கு தெரியும் என்றால் , மற்ற காலங்களுக்கான கணக்கு எங்கள் வங்கி கணினியில் உள்ளது. அழைப்பாணையில் அவை கேட்கப்படாததால் நான் அவற்றை பார்க்கவில்லை. எமசா ஆ 12 ஆவணப்படி 19.08.2014ல் புகார்தாரர் கணக்கில் ரூ.2லட்சம வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால், காலையில் புகார்தாரர் காசோலையை வங்கியில் வைப்பீடு செய்தவுடன் அந்த காசோலைக்கான தொகை வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும், பின்னிட்டு அந்த காசோலைக்கு உரிய தொகை பெறப்படவில்லை எனில் மீண்டும், வைப்பீடு செய்யப்பட்ட தொகை திரும்ப வங்கியால் எடுத்துக்கொள்ளப்படும். எமசாஆ12 ஆவணப்படி புகார்தாரர் எங்கள் வங்கியில் வரவு செலவு வைத்துள்ளார் என்றால், ஆமாம். புகார்தாரர் குறைந்தபட்ச வைப்பு தொகையை கணக்கில் வைக்காததால் எங்கள் வங்கியால் சார்ஜ்ஸ் போடப்பட்டுள்ளது. 18.08.2014ல் புகார்தாரர் ரமேஷ் எதிரி குத்தாலிங்கம் கொடுத்த காசோலையை எங்கள் வங்கியில் கலெக்ஷனுக்காக போட்டுள்ளார் என்றால்சரிதான். அந்த காசோலை என்னவாயிற்கு என்றால், போதிய பணம் இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளது. நான் மேற்படி வங்கியில் எப்போதில் இருந்து பணியாற்றுகிறேன் என்றால், ஜுலை 2015ல் இருந்து பணியாற்றுகிறேன்.

நாள் - 25.09.2018.
அ.வ.எண் 122/2017
பி வா சா 2 நம்பி, த/பெ மாடசாமி தேவர்
சாட்சி சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்தில் இருந்த சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நானும் அய்யாக்குட்டியும் உறவினர்கள் என்றால், இல்லை. பழக்கமானவர்கள். நாங்கள் இருவரும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் எது என்றால், கீழகருவேலன்குளம் ஆகும். கீழகருவேலன்குளத்திற்கும் கோவிலம்மாள்புரத்திற்கும் இடையே சுமார் 10 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால், சரியல்ல. 8 கி.மீ. தொலைவு இருக்கும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிராதில் எத்தனை தபசில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால், 2 வீட்டிற்கு வழக்கு என்பது மட்டும் தெரியும். இந்த வீடுகள் உள்ள சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வீடுகளின் கதவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அய்யாக்குட்டி என் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அய்யாக்குட்டியின் கிரைய ஆவணமான பி வாசா ஆ 2ல் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்திற்கான விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் , ஆமாம். இந்த முதல்விசாரணை வாக்குமூலத்தை வழக்கறிஞர் படிக்க கேட்டுதான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பி வாசா ஆ 2 ஆவணத்தில் என்னை தவிர வேறு யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால், கண் பாண்டியன் என்பவர் போட்டுள்ளார். வேறு யாரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்களா என்றால், இல்லை. தபசில் சொத்தில் 2 வீடுகள் உள்ளது என்றால், ஆமாம். இந்த இரண்டு வீடுகளுக்கும் மேற்கில் உள்ள முடுக்கினை வாதிகள், முதல் பிரதிவாதி மற்றும் சுடலைக்கண்ணுதேவர் மகன் நம்பித்தேவர் ஆகியோர் புழங்கி வருகின்றனர் என்றால், இல்லை. அய்யாக்குட்டியும் நம்பிதேவரும்தான் புழங்கி வருகின்றனர். நான் மேற்கண்டவாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த முடுக்கிற்கு முதல்வாதி, அவரின் தாயார் முனியம்மாள் ,

முதல்பிரதிவாதி மற்றும் நம்பித்தேவர் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அய்யாக்குட்டி பெயரில் இருக்கும் பட்டா எண் என்ன என்றால், எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி வாசா ஆ 2 ஆவணத்தில் எனது கையொப்பம் எங்கு உள்ளது என்றால், இந்த ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை. நான் முதல்பிரதிவாதியின் வேண்டுகோளின் கீழ் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. அய்யாக்குட்டி தனது 2015 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி வீட்டிற்கு உரிமை கொண்டாடுகிறார் என்றால், ஆமாம். அய்யாக்குட்டி மேற்பக்கம் உள்ள வீட்டில்தான் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். ஆனால் இரண்டு வீட்டையும் அவர்தான் அனுபவித்து வருகிறார். கீழ்பக்கம் உள்ள வீட்டை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை

பி வா சா ஆ 2 ஆவணத்தில் 4வது பக்கத்தில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் ஆமாம். அதில் M நம்பி என்பது எனது கையெழுத்து ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

பி வா சா ஆ 2 பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. ஆனால் பத்திரம் எழுதிய இசக்கி 2 வீடு சம்பந்தமாக எழுதுவதாக கூறினார். பி வாசா ஆ 2 ஆவணத்தில் சரவணன் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டிருப்பது தெரியுமா என்றால், தெரியும். இந்த சரவணன் இசக்கியம்மாளின் மகள் வழி பேரன் என்றால் ஆமாம். அந்த சரவணனை விசாரித்தால் வழக்கின்முழு விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். என்னை சாட்சி கையொப்பம் போட அய்யாக்குட்டிதான் அழைத்து சென்றாரா என்றால், ஆமாம்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.62/2016** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW.4** |
| **Name** | : | மாடத்தி |
| **Father's Name** | : | க/பெ V. மணி |
| **Village** | : | உன்னங்குளம் |
| **Taluk** | : | நான்குநேரி தாலுகா |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 25.09.2018.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால், ஆமாம். எனது சொந்த ஊர் எது என்றால், உன்னங்குளம் ஆகும். என்னுடைய தாயார் பெயர் என்ன என்றால், A மாடத்தி ஆகும். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால், A அந்தோணி ஆகும். எனது தகப்பனாருக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்றால், எனக்கு மொத்தமாக தெரியாது. எனது தகப்பனாருக்கு எத்தனை ஏக்கர் பாத்தியப்பட்டிருந்தது என்றால், சுமார் 4 முதல் 5 ஏக்கர் பாத்தியப்பட்டிருந்தது. அந்த சொத்துக்கள் எனது தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்துக்களா என்றால், இல்லை. எனது தாத்தா மூலம் கிடைத்த பூர்வீக சொத்துக்கள் ஆகும். எனது தாத்தாவின் பூர்வீக சொத்துக்களில் எங்களுக்கும் எஸ் கே மாடசாமி மற்றும் வேலாயுதம் மகன் சுப்பிரமணியனுக்கும் தலா 1/2 பாகம் பாத்தியம் என்றால் எங்கள் ஊரான உன்னங்குளத்தில் ெ மாத்தம் 20 பங்கு உள்ளது அதில் ஒரு பங்கில் 1/2 பங்கு எங்களுக்கும் 1/2 பங்கு அரிபாலகிருஷ்ணன், சுப்பீரமணியன் ஆகியோருக்கும் பாத்தியப்பட்டது. உன்னங்குளத்தை சேர்ந்த ஜெபத்தியான் மகன் வன்னியராஜாவை தெரியுமா என்றால், எங்கள் ஊரில் வன்னியராஜா என்ற பெயரில் ஒருவர் இருக்கிறார் அவர் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. இளையார்குளம் ஊரைச்சேர்ந்த தபசு என்பவரை தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. உன்னங்குளத்தில் முத்துகிருஷ்ணன் மகன் சுப்பிரமணியனை தெரியுமா என்றால்,

தெரியாது. உன்னங்குளத்தின் தலையாரி மாடசாமியை எனக்கு தெரியுமா என்றால், அவர் எங்கள் ஊரில் வேலை பார்த்ததின் மூலம் தெரியும். மேற்கண்ட நபர்களுக்கு எனது தகப்பனார் மூலம் எனக்கு கிடைத்த சொத்துக்களை விற்றுள்ளேனா என்றால், வன்னியராஜா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோருக்கு மட்டும் விற்றுள்ளேன். இந்த நபர்களுக்கு கிரைய பத்திரமாக கொடுத்துள்ளேனா என்றால், ஆமாம். வழக்கு சொத்தை அதிகார முகவர் மூலம் விற்றுள்ளேன் என்றால், நான் அரிபாலகிருஷ்ணனுக்கு அதிகார ஆவணம் கொடுத்து அதன் மூலம் விற்றுள்ளேன். நான் வெளியூர் எதுவும் செல்லாமல் உள்ளூரில்தான் இருக்கிறேன் என்றால், ஆமாம். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நான் நேரடியாக கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றாலும், தபசில் சொத்து எனது தகப்பனாருக்கு உரிமையில்லாத செ ாத்து என்பதால்தான் மோசடியாக அதிகார ஆவணம் கொடுத்து போலியாக கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அரிபாலகிருஷ்ணனுக்கு கொடுத்த அதிகார ஆவணத்தில் சாட்சி கையொப்பம் யார் போட்டுள்ளார்கள் என்றால், எனக்கு தெரியாது. சாட்சியிடம் பி வாசா ஆ 4 ஆவணம் காண்பிக்கப்பட்டு, அதில் இன்னாரென்று ரூபித்தவர் என்ற இடத்தில் மாடசாமி மகன் வெங்கலவன் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை யார் விவசாயத்திற்காக வெட்டி சமப்படுத்தியது என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. நான் அரிபாலகிருஷ்ணனுக்கு அதிகார ஆவணம் மூலம கொடுத்த சொத்து யாருடையது என்றால், அந்த சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் மொத்தமாக கூட்டுப்பட்டா இருந்தது மொத்தமாக விற்க முடியாது என்பதால் எனது தகப்பனார் பாகத்தை பொறுத்து அரிபாலகிருஷ்ணனுக்கு அதிகார ஆவணம் கொடுத்தேன். எனது தகப்பனார் பெயரில் பட்டா மட்டும்தான் இருந்ததா என்றால், நிலமும் என் தகப்பனாருக்கு உரியதுதான். அரிபாலகிருஷ்ணன் எஸ் கே மாடசாமியின் மகன் என்றால் சரிதான். நான் அரிபாலகிருஷ்ணன் மற்றும் வெங்கலவன் ஆகியோர் சேர்ந்து எனக்கு உ ரிமையில்லாத சொத்தை போலியாக அரிபாலகிருஷ்ணனுக்கு அதிகார ஆவணத்தினை ஏற்படுத்தியுள்ளோம் அதன் அடிப்படையில் போலி கிரைய ஆவணத்தினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே தபசில் சொத்தின் மீது பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும், அனுபவமும்

இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் தற்போது சோளப்பயிர் நட்டுள்ளது என்றால், எனக்கு அது பற்றி தெரியாது.

குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து எனது தகப்பனாருக்கு பர்ததியப்பட்டது என்றால் ஆமாம். எனது தகப்பனாருக்கும் மொத்த சொத்தில் பங்கு உள்ளது. எனது தகப்பனார் காலமான பிறகு எனது தாயார் மற்றும் எனது பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். எனது பெயர் மாடத்தி என்றால் ஆமாம். எனது தாயார் பெயரும் மாடத்தி என்றால், ஆமாம். தபசில்சொத்தை எனது தகப்பனார் அடமானம் வைத்திருந்தார் என்றால், எனக்கு தெரியாது. நானும் எனது தாயாரும் பெண்களாக இருப்பதால் சொத்தை விற்பனை செய்யும் வகைக்கு அரிபாலகிருஷ்ணனுக்கு அதிகார ஆவணம் கொடுத்தோம் என்றால் சரிதான். அரிபாலகிருஷ்ணன் வெங்கலவனுக்கு சொத்தை விற்றுள்ளார் என்றால், ஆமாம். நான் கொடுத்த அதிகார ஆவணத்தின் அடிப்படையில் விற்றுள்ளார். தபசில் சொத்தில் எஸ் கே மாடசாமிக்கோ, வாதி பாலுக்கோ சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S.124/2015** |
| **Deposition of witness for** | **:** | **Defendant** |
| **Serial No. of Witness** | **:** | **DW.3** |
| **Name** | **:** | தேவதாசன் |
| **Father's Name** | **:** | இசாக் |
| **Village** | **:** | ஏமன்குளம் |
| **Taluk** | **:** | நான்குநேரி தாலுகா |
| **Age** | **:** | 74 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 25.09.2018.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் பிரதிவாதிதரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.3. தாவா வழக்கு தள்ளுபடியாக பிரார்த்திக்கிறேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S.172/2015** |
| **Deposition of witness for** | **:** | **Plaintiff** |
| **Serial No. of Witness** | **:** | **PW.4** |
| **Name** | **:** | முருகன் |
| **Father's Name** | **:** | சிவன்பாண்டி |
| **Village** | **:** | விஜயநாராயணம் கிராமம் |
| **Taluk** | **:** | நான்குநேரி தாலுகா |
| **Age** | **:** | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 26.09.2018.
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S.16/2017** |
| **Deposition of witness for** | **:** | **Defendant** |
| **Serial No. of Witness** | **:** | **DW.1** |
| **Name** | **:** | ஆறுமுகம் |
| **Father's Name** | **:** | நேருபாண்டியன் |
| **Village** | **:** | திருநெல்வேலி டவுண் |
| **Taluk** | **:** | திருநேல்வேலி தாலுகா |
| **Age** | **:** | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.09.2018.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க மு வி தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF,NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.60/2016** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW.5** |
| **Name** | : | நிஜாம் |
| **Father's Name** | : | ஜமீல் அகமது |
| **Village** | : | பாளையங்கோட்டை |
| **Taluk** | : | |
| **Age** | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 19.09.2018.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. முதன்மை செயல் அலுவலர், வஃப்பு வாரியம் சென்னைக்குதான் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அதிகார கடிதம் கொடுத்து என்னை சாட்சியம் அளிக்க அனுப்பியுள்ளனர். அழைப்பாணையில் என்ன என்ன ஆவணங்கள் கோரப்பட்டுள்ளது தெரியுமா என்றால், தெரியும். இனாம் பதிவேடும், அசேன் உசேன் பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய கோரியுள்ளனர். இனாம் பதிவேட்டை நான் கொண்டு வந்துள்ளேனா என்றால், எங்கள் வஃப் வாரியத்தில் இனாம் பதிவேடு பராமரிக்கும் வழக்கம் இல்லை. எனவே கொண்டு வரவில்லை. அசேன் உசேன் பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட வேறு எந்த ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன் என்றால், வஃப் புரோபார்மா அறிக்கை மற்றும் கெசட் நோட்டிபிகேஷன் ஆகியவற்றை கொண்டு வந்துள்ளேன். இந்த புரோபார்மா அறிக்கை எப்போது தயாரிக்கப்பட்டது என்றால், கெசட் நோட்டிபிகேஷன் போடப்பட்ட 1959ல் தயாரிக்கப்பட்டது. நான் கொண்டு வந்துள்ள மேற்கண்ட ஆவணங்கள் அசல் ஆவணங்களா என்றால், இல்லை. அசல் சென்னை அலுவலகத்தில் உள்ளது முதன்மை செயல் அலுவலர், வஃப் வாரியத்தினர் அசல் பதிவேட்டை பார்த்து தட்டச்சு செய்து சான்றிட்ட நகலாக வழங்கியுள்ளனர். எந்த தேதியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால், 17.09.2018ல்

தட்டச்சு செய்யப்பட்டதாக தேதி போடப்பட்டுள்ளது. சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி கடிதம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால், 17.9.2018ல் தேதியிடப்பட்டுள்ளது. நேரில் மேற்படி ஆவணங்களை கொடுத்தார்களா என்றால், இல்லை தபாலில் வந்தது. அந்த தபாலின் அஞ்சல் உரையை வைத்துள்ளேனா என்றால், இல்லை. எப்போது எனக்கு தபால் வந்தது என்றால், நேற்றையதினம் வந்தது அனுமதி கடிதத்தில் உள்ள இரண்டு கையெழுத்துக்கள் யாருடையது என்றால், ஒரு கையெழுத்து தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் கண்காணிப்பாளரின் கையெழுத்து ஆகும். மற்றொரு கையெழுத்து தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் உதவியாளரின் கையெழுத்து ஆகும். இந்த கையெழுத்துக்கள் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அசல் கையெழுத்துக்கள் அல்ல என்றாலும் சரியல்ல. சென்னை தமிழ்நாடு வஃப் வாரியத்தினா் சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அனுமதி கடிதம் வந்திருந்தால் அதனுடன் சம்மனையும் எனக்கு சேர்த்து அனுப்பியிருப்பார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே சம்மனை எனக்கு அனுப்பியிருந்தார்கள் நான் அதை இன்று நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை. அலுவலகத்தில் தேடிப்பார்த்து தாக்கல் செய்கிறேன். அசேன் உசேன் பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால், நான் தாக்கல் செய்த புரோபார்மா உள்ளது. அதுவும் பெரிய பதிவேடாக உள்ளது. அசல் ஆவணத்தின் உண்மைகளை மறைத்துதான் புரோபார்மாவை நான் கொண்டு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணத்தை பார்த்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரிதான். ஆனால் அதை பார்த்துதான் புரோபார்மா தயார் செய்யப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

முதன்மை செயலா் வஃப் வாரியம் போட்ட உத்தரவின் அடிப்படையில் கண்காணிப்பாளா் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் வழங்கியுள்ளாா் என்றால், ஆமாம். அந்த கடிதம் **சா சா ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஏர்வாடி அசேன் உசேன் பள்ளிவாசல்

சம்பந்தப்பட்ட புரோபார்மா அறிக்கை **சா சா ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏற்கனவே 12.09.2018 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை வந்தது என்றால் முதன்மை செயல் அலுவலருக்கு அழைப்பாணை வந்தது. அவருடைய அறிவுறுத்துதலின் பேரில் நான் 12.9.2018 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். அன்றையதினம் ஆவணங்கள் கிடைக்காததால் நான் வாய்தா பெற்று சென்றேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள சா சா ஆ 2, மற்றும் 3 ஆவணங்கள் 12.09.2018க்கு பின்னிட்டு எனக்கு வந்தது என்றால், ஆமாம். சா சா ஆ 3 ஆவணப்படி அசேன் உசேன் பள்ளிவாசல் முஸ்லீம் ஷன்னி பிரிவிவை சார்ந்தது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின்படி அசேன் உசேன் பள்ளிவாசலுக்கும் ஷியா பிரிவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வஃப் சட்டப்படி முத்தவல்லி பதவியானது பரம்பரையாக வழங்கப்படும் பதவி அல்ல என்றால் சரிதான். இந்த முத்தவல்லியை ஜமாத்தினர் தேர்ந்தெடுப்பார்கள் என்றால் சரிதான். இது சம்பந்தமாக சா சா ஆ 3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சா சா ஆ 3 ஆன மூல அறிக்கை தயாரிக்கப்பட்டது முதல் இன்றுவரை எந்தவித மாற்றமும் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். எனவேதான் சா சா ஆ 3 ஆவணத்தில் அப்போது இருந்த அசேன் உசேன் பள்ளிவாசலின் செயலாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீதிமன்ற வினா - அசேன் உசேன் பள்ளிவாசலின் தற்போதைய செயலாளர் யார் என்பது குறித்த பதிவேடுகள் உங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால், பார்த்துதான் கூற முடியும். சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா போடப்படுகிறது.

நாள் - 26.09.2018.
அ.வ.எண் 60/2016
வா சா 5 நிஜாம், த/பெ ஜமீல் அகமது
சாட்சி சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்
<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

19.09.2018 அன்று இந்த நீதிமன்றம் அசேன் உசேன் பள்ளிவாசலின் தற்போதைய செயலாளர் யார் என்பது குறித்த பதிவேடுகளை தாக்கல் செய்ய சாட்சியிடம் கேட்டபோது அந்த பதிவேடுகள் அலுவலகத்தில் உள்ளதா என பார்த்துதான் கூற முடியும் என கூறி சென்று, இன்று நீதிமன்றத்தில் சாட்சி ஆஜராகி அது சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் தற்போதைய செயலாளர் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படாமல் இருப்பதாகவும், ஆனால் அசேன் உசேன் பள்ளிவாசலுக்கு 2003லிலேயே நிர்வாக கமியிட்டியினர் தேர்ந்தெடுக்கப்பட்டு 2003ல் இருந்து தற்போது வரை எஸ் ஷேக்முகம்மது என்பவர் தலைவராக இருப்பதாகவும், காஜாமுகைதீன் என்பவர் செயலாளராக இருப்பதாகவும் கூறினார். மேலும் 2003ல் இருந்து மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் தங்களை பதிவு செய்துகொள்ள வஃபு வாரியத்திடம் மனு எதுவும் இன்றுவரை கொடுக்கவில்லை என்றும், தற்போது மேற்படி பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட அனைத்து கடித போக்குவரத்துகளும் எஸ் ஷேக்முகம்மதுவிற்கு வஃபு வாரியம் அனுப்பி வருவதாகவும், மேற்படி நபர்கள் தங்களின் தேர்ந்தெடுப்பு சம்பந்தமாக மனு கொடுக்கும்பட்சத்தில் உடனடியாக பதிவேட்டில் அது பதிவுசெய்யப்படும் என்றும் கூறினார்.

நாள் - 26.09.2018.

அ.வ.எண் 124/2015

பி வா சா 3 தேவதாசன், த/பெ இசாக்

சாட்சி சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றால் சரிதான். நான் எங்கு பணியாற்றினேன் என்றால், கடைசியாக சிவகங்கை மாவட்டம், கண்ணன்குடி உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியதாக பணியாற்றி 2002ல் ஓய்வு பெற்றேன். நான் நல்லாசிரியர் விருது எதுவும் பெற்றுள்ளேனா என்றால், இல்லை. வாதி, பிரதிவாதி ஆகியோரும் நானும் வெவ்வேறு சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியும். சர்வே எண் 60/2பி ஆகும். வாதி, பிரதிவாதி வீடுகளுக்கும் எனது வீட்டிற்கும் இடையில் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், 100 மீட்டர் இருக்கும். தபசில் சொத்தில் பனை மரங்கள் உள்ளதா என்றால், 2 பனை மரங்கள் உள்ளது. நெல்லையப்பன் மற்றும் மீனாட்சிநாதன் ஆகியோர் குடும்பத்தில் சொத்து சம்பந்தமாக என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால், சரிதான். பால்கனி சைமன் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால், முதலில் பால்கனி நெல்லையப்பனை திருமணம் செய்திருந்தார். அவர் காலமான பிறகு தற்போது வேறு ஒருவரை திருமணம் செய்து சென்னையில் இருப்பதாக எனக்கு தெரியும். அந்த நபர் பெயர் எனக்கு தெரியாது. பால்கனி 2வது திருமணம் செய்து சுமார் 25, 30 ஆண்டுகள் இருக்குமா என்றால், எனக்கு வருடம் ஞாபகம் இல்லை. நெல்லையப்பன் காலமாகி எத்தனை ஆண்டுகள் கழித்து பால்கனி 2வது திருமணம் செய்துகொண்டார் என்றால், ரொம்ப வருடங்கள் கழித்து திருமணம் செய்தார். எனக்கு வருடம் சரியாக தெரியாது. 5 ஆண்டுகளுக்கும் மேல் இருக்கலாம். பால்கனியின் 2வது திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால், இல்லை. கேள்விப்பட்டேன். பால்கனி , சைமன் ஆகியோரின் திருமணம் பெத்தானியாவில் உள்ள தேவாலயத்தில் நடந்தது என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. இந்த வழக்கு சொத்திற்கு கிழக்கில் எனது இடம் உள்ளதா என்றால், ஆமாம். தற்போது அதை எனது மகனுக்கு எழுதிக்கொடுத்துள்ளேன். நானும் வாதி உலகமணியின் கணவரும் எவ்வளவு ஆண்டுகளாக பேசிக்கொள்ள மாட்டோம் என்றால், எங்களுக்குள் பிரச்சனை எதுவும்

இல்லை. நாங்கள் பேசிக்கொள்வோம். எனது இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் இடையில் பனை மரங்கள் இருக்கிறது என்றால் சரிதான். எனது வேலியை ஒட்டி 2 பனை மரங்கள் உள்ளன. இந்த வேலியை ஒட்டி இருக்கும் பனை மரங்களை உலகமணி தனது மரம் என்றும், நான் அவை எனது மரம் என்றும் கூறி வருகிறோம் என்றால் சரிதான். அது சம்பந்தமாக எங்களுக்கு இடையே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் பிரச்சனை இருப்பதால்தான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தபசில் சொத்தை வாதியின் முன்சுவான்தார் சுப்பையாவிடம் கிரையம் கேட்டேன் என்றால், அவர்தான் கிரையம் கொடுப்பதாக கூறினார். அது சம்பந்தமாக நான் VAO அலுவலகத்தில் பார்த்தபோது பூவம்மாள் மற்றும் பால்கனி இருவர் பெயரில் இருந்ததால் நான் அதை வாங்கவில்லை. நான்தான் சுப்பையாவிடம் கிரையம் கேட்டேன் என்றாலும், அவர் கிரையம் கொடுக்காததால் தற்போது அவரிடம் இருந்து கிரையம் பெற்ற வாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தனது முன்சுவான்தார்களை தொடர்ந்து வாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக முதல்விசாரணை வாக்குமூலத்தைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. மறு விசாரணை இல்லை.

நாள் - 26.09.2019.

அ.வ.எண் 38/2018

வா சா 1 கதிரவன், த/பெ ராசையா

சாட்சி சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்

முதல் விசாரணை தொடர்ச்சி

கூட்டுறவு வங்கி கடன் செலுத்தப்பட்டதற்கான ரசீதுகள் எண்ணம் 16 வா சா ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.